1984 மார்ச் 26]

கிராமங்களிலே அதிகமான மக்கள் இருக்காலம். சில கிராமங் களிலே மக்கள் குறைவாக இருக்கலாம். இன்னும் சொல்லப் போனால், வருவாய் கிராமங்கள் சிலவற்றில் மக்களே இல்லாத நிலைமை கூட இருக்கின்றன. 60, 70 கிராமங்கள் அவ்வாறு இருக்கின்றன. ஒரு குடும்பமும் இல்லாத வருவாய் கிராமம் கூட இருக்கின்றது. ஆனால், கூடுதலாக வைக்க வேண்டிய இடத்தில், அவசியத்திற்கேற்ப வைத்திருக்கிறோம். 12,600 கிராமங்கள் இருந்தாலும், 16,053 கடைகள் வைத்திருக்கிறோம். நான் முதலிலே சொன்னபடி, தேவைப்படுகிற இடத்தில், அவசியப் படுகிற இடத்தில், அந்தந்த கார்டுகளுடைய எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் அந்தக் கடைகளை வைக்க அரசு முயலும்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 450, 451, 452 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டு கோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

திரைப்படத் தொழில் ஊழியர்களுக்கு குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கும் திட்டம்.

453—*(வினா எண். 17093)—**திரு. கு. ரமணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மாநகரில் உள்ள சினிமாத்துறை ஊழியர் களும், துணை நடிகர்களும் தங்களுக்கு நியாயமான ஊதியம் நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டு அரசுக்குக் கோரிக்கை சமர்ப்பித்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) : உற்பத்தி, வினியோகம் மற்றும் விளம்பரம் உள் ளிட்ட திரைப்படத் தொழில் வேலைக்கு குறைந்த அளவு ஊதியம் முதன் முறையாக 24-11-1982 முதல் நிர்ணயிக்கப் பட்டது. திரையரங்குகளில் வேலைக்கு குறைந்த அளவு ஊதியம் 1977-ல் நிர்ணயிக்கப்பட்டு 16-2-1983 முதல் திருத்தியமைக்கப் பட்டுள்ளன. துணை நடிகர் அல்லது பிற எத்தகைய நடிகருக்கும் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக் கப்படவில்லை. குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்க வேண்டு மென்று கோரிக்கை ஏதும் அவர்களிடமிருந்து வரவில்லை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தத் துணை நடிகர் களுடைய குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிப்பதற்கு அரசிடம் அவர்கள் கோரிக்கை எதுவும் கொடுக்கவில்லை என்று அமைச்சர்

அவர்கள் சொன்னார்கள். துணை நடிகர்கள் அநேகமாக சாதாரண தொழிலாளர்கள் மட்டத்திலே தான் இருக்கிறார்கள். ஒரு மாதத்தில் அவர்களுக்கு பல நாட்கள் வேலையில்லாமல் இருக்கக் கூடிய நிலைமையிருக்கிறது. சாதாரண தொழிலாளர்களுடைய அந்தஸ்திலேயே அவர்கள் இருப்பதால், அவர்களுக்கும் இந்த குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிப்பதற்கு, அவர்களையும் இந்தச் சட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கு ஏதாவது முயற்சியினை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே திரையரங்குகளில் வேலை செய்பவர்களுக்கு மட்டும் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், புரட்சித் தலைவர் அரசு ஏற்பட்ட பின்னர், முதன் முதலாக உற்பத்தி, விநியோகம் மற்றும் விளம்பரம் செய்பவர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்திருக்கிறோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் ரமணி சொல்வதுபோல், இந்தத் துணை நடிகர்களுக்கு எல்லாம் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பது என்பது மிகச் சிரமமாக இருக்கும் என்று இந்த அரசு கருதுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தக் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்படி, ஒருதடவை ஊதியம் நிர்ணயித்து விட்டால், மறுபடியும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அதைத் திருத்தியமைப்பது என்ற முறையில் அரசு சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதே மாதிரி ஒரு நிர்ணயிப்பு செய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் ஆகியயவைகளின் தொழிலாளர் நல அமைச்சர்கள் சேர்ந்து அதிலே தீர்மானித்திருக்கிறார்கள். இரண்டு வருஷ காலத்திற்குள் அல்லது 50 புள்ளி விலைவாசி ஏறினால், திருத்தியமைக்கப்பட வேண்டுமென்ற முடிவுகள் உள்ளன. அந்த முடிவின்படி, இந்த ஊதியத்தை நிர்ணயிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் உள்ளவர்களுக்கு 16-2-1983-ல் தான் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தி, விநியோகம், விளம்பரம் ஆகியவைகளில் உள்ளவர்களுக்கு 24-11-1982-ல் தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 24-11-1982 அன்று நிர்ணயிக்கப்பட்டதும், 16-2-1983-ல் நிர்ணயிக்கப்பட்டதும், இன்னும் இரண்டு ஆண்டுகள் ஆகவில்லை. சட்டத்திலே 5 ஆண்டுகள் என்றிருக்கிறது. அமைச்சர்கள் மாநாட்டிலே நாங்கள் எல்லாம் கூடி, 50 புள்ளி விலைவாசி உயர்ந்து விட்டால் அல்லது 2 ஆண்டுகள் ஆகிவிட்டால் குறைந்தபட்சம் கூலியை மாற்றியமைக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்துள்ளோம். அதை இந்த அரசு கூடுமானவரை பின்பற்றி வருகிறது.

1984 மார்ச் 26]

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாண்டுகள் அல்லது ஐம்பது புள்ளிகள் உயர்ந்தால் குறைந்த பட்சக் கூலியைத் திருத்தியமைக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். 1982 நவம்பரில் விலைவாசி 496 ஆகவும், 1983 டிசம்பரில் 559 ஆகவும் இருக்கிறது. எனவே, இப்படி ஐம்பது புள்ளிகளுக்கு மேலே உயர்ந்திருப்பதால் இதை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதுதான் சொன்னேன், கூடுமானவரையில் இதையும் பின் பற்றிச் செயல்பட்டுக் கொண்டு வருகிறோம் என்று.

குடவாசல் ஒன்றியப் பகுதியிலுள்ள ஊர்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

454 —(வினா எண். 18087)* **திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம் விளாகம், நல்லிச்சேரி, செகந்நாதபுரம், பல்லவநத்தம், அபிசேகமங்கலம், கடகம்பாடி, நெம்மேலி, அதம்பாவூர், அதம்பாவூர்ப்படுகை, தேதியூர், வில்லியநல்லூர் ஆகிய பகுதிகளில் குடிதண்ணீர் உப்பு நீராக உள்ளதால் நல்ல குடிதண்ணீர் வழங்கவேண்டி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட அனைத்துச் சிற்றூர்களுக்கும் தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கடகம்பாடி நீங்கலாக மற்ற அனைத்துச் சிற்றூர்களிலும் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன. கடகம்பாடியில் குடிக்கத் தகுதியான நீர் ஏற்கெனவே உள்ளது.

தாரமங்கலம் பேரூராட்சியில் குடிநீரை விநியோகம் செய்ய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் திட்டம்.

455 —(வினா எண். 18208)* **திரு. செ. செம்மலை :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம் பேரூராட்சியில் குடிநீரைச் சேமித்து விநியோகம் செய்ய ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக்கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?